**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, TIRUPATTUR.**

**C.C. No.799/2025.**

1. Deposition of Witness for : PW1
2. Name : பிரேம்குமார்.க
3. Father's Name : கணேசன்
4. Village : வேலூர்
5. Taluk : வேலூர்
6. Calling : உதவி இயக்குநர் – 2 தொழிலக பாதுகாப்பு சுகாதாரம்
7. Age : 31

Solemnly affirmed by Selvi.M.K.Anusha, M.L., Chief Judicial Magistrate, Tirupathur in accordance with the provision of Act X of 1873 of the day of 13.11.2025.

எதிரி ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>:–

நான் தற்போது இரண்டாம் வட்டம் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் உதவி இயக்குநராக பொறுப்பு வகித்து வருகிறேன். திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி தாலுக்கா, வளையம்பட்டு, எம்.சி.ரோடு, கதவு எண்.1/128, பாரத் இன்ஜினரிங் ஒர்க்ஸ், என்ற முகவரியில் இயங்கும் தொழிற்சாலை manufacturing of leather tanning and finishing machine and servicing பணி நடைப்பெற்று வருகிறது. மேற்கண்ட முகவரியில் இயங்கும் தொழிற்சாலையில் திரு.ஜெயசங்கர் (லோடு மேன்) வயது 55 என்ற தொழிலாளிக்கு விபத்து ஏற்பட்டு மரணம் நிகழ்ந்துள்ளது என ஊடகங்களில்

20.04.2025 அன்று மாலை செய்து வெளிவந்ததை அடுத்து 21.04.2025 அன்று உதவி இயக்குநர்–II ஆகிய நான் மரண விபத்து புலனாய்வு செய்யப்பட்டது. 21.04.2025 அன்று ஆய்வின்போது காணப்பட்ட முரண்பாடுகளுக்கு என்னால் ஆய்வறிக்கை செய்யப்பட்டது. தொழிற்சாலை ஆய்வின்போது உரிமையாளர் ஆகிய திரு.ஆர்.மனோகரன் உடன் இருந்தார். அவரிடம் ஆய்வறிக்கையில் கையொப்பம் வாங்கப்பட்டது. மேற்படி ஆய்வறிக்கை நகல் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தொழிற்சாலையின் படிவம் எண்.2ன் படி தொழிற்சாலையின் உரிமையாளர் மற்றும் மேலாளர் திரு.மனோகரன் வயது 67 த/பெ. ராஜகோபால் ஆவார். மேற்படி படிவம் எண்.2 நகல் **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வின்போது விபத்து நடந்த சமயம் உடன் இருந்த தொழிலாளர்கள் திரு.ஆர்.தமிழ்செல்வம் மற்றும் திரு.குப்பன் ஆகியோரிடமிருந்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. தமிழ்செல்வன் என்பவரின் வாக்குமூலம் நகல் **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. குப்பன் என்பவரின் வாக்குமூலம் நகல் **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த ஆய்வின் அடிப்படையில் தொழிற்சாலையின் மீது காணப்பட்ட முரண்பாடுகளுக்கு தொழிற்சாலையின் உரிமையாளர் மற்றும் மேலாளருக்கு காரணம் கோரும் அறிக்கை 30.04.2025 அன்று அனுப்பட்டது. அந்த காரணம் கோரும் அறிக்கை நகல் **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காரணம் கோரும் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை 02.05.2025 அன்று பெறப்பட்டது. ஒப்புதல் அட்டை நகல் **அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்து குறித்த விதம்

விபத்துக்கான காரணம் மற்றும் விபத்து தடுப்பு முறைகளுடன் கூடிய விரிவான புலனாய்வு அறிக்கை தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களுக்கு 30.04.2025 அன்று அனுப்பி வைக்கப்பட்டது. அந்த விரிவான புலனாய்வு அறிக்கை நகல் **அ.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்து நிகழ்ந்தது குறித்து திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி தாலுக்கா காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை FIR.No.144/2025 U/s. 194 BNSS பதிவு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை நகல் **அ.த.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை நகல் பெறப்பட்டது. பிரேத பரிசோதனை நகல் **அ.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காரணம் கோரும் அறிக்கைக்கான பதில் கடிதம் உரிமையாளர் மற்றும் மேலாளரிடமிருந்து 09.05.2025 அன்று பெறப்பட்டது. பதில் கடிதம் நகல் **அ.த.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பெறப்பட்ட பதில் கடிதம் ஏற்புடையதாக இல்லை என்பதால் உரிமையாளர் மற்றும் மேலாளர் மீது மேல் நடவடிக்கை கடிதம் 05.06.2025 அன்று அனுப்பப்பட்டது. மேல் நடவடிக்கை கடிதம் நகல் **அ.த.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு முன்மொழிவு பேரரணை என்னால் 05.06.2025 அன்று சென்னை தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. வழக்கு முன்மொழிவு பேரரணை நகல் **அ.த.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு சென்னை தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களின் வழக்கு தொடர அனுமதி ஆணை 10.07.2025 அன்று பெறப்பட்டது. வழக்கு தொடர அனுமதி ஆணை நகல்

**<u>அ.த.சா.ஆ.13</u>** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனவே கீழ்கண்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் திருப்பத்தூர் மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்கள் முன்னிலையில் 18.07.2025 அன்று குற்றமுறையீடு உதவி இயக்குநர் ஆகிய என்னால் தாக்கல் செய்யப்பட்டது.

குற்றமுறையீடு தொலைச்சாலை சட்டம் 1948 மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை விதிகள் 1950ன் கீழ் தண்டனை பிரிவு 92 ஆகும்.

**<u>முரண்பாடு–1</u>**

தொழிற்சாலைகள் சட்டம் 1948 (திருத்தப்பட்ட சட்டம் 1987) தமிழ்நாடு விதிகள் 1950 பிரிவு 112 உடன் விதி 103(1)(2) படி தொழிற்சாலையில் பணிப்புரியும் தொழிலாளர்களின் பெயர், வயது, தகப்பனார் பெயர், வேலையின் தன்மையுடன் கூடிய Muster roll and Register of Compensatory Holidays பதிவேடு நமுனா எண்.25 பதிவு செய்து பராமரிக்கப்பட வேண்டும். இதற்கு முரணாக தங்கள் தொழிற்சாலையினை 21.04.2025 அன்று ஆய்வு செய்தபொழுது தங்கள் தொழிற்சாலையில் பணிபுரிந்து கொண்டிருந்த அனைத்து தொழிலாளர்களுக்கு படிவம் எண்.25 படியான வருகைப் பதிவேடு பராமரிக்கப்படவில்லை. அதனை ஆய்வின் போது கேட்டும் காண்பிக்கப்படவில்லை. இது பிரிவு 112 உடன் விதி 103(1)(2) படி கடும் முரணாகும்.

**<u>முரண்பாடு – 2</u>**

தொழிற்சாலைகள் சட்டம் 1948 (திருத்தப்பட்ட சட்டம் 1987) தமிழ்நாடு விதிகள் 1950 பிரிவு 29(1)(a)(iii) மற்றும் பிரிவு 29(2) மற்றும் விதி 55A(1) படி

எந்தவொரு தொழிற்சாலையிலும் பயன்படுத்தப்படும் கிரேன் மற்றும் அதன் பெல்ட் போன்ற Lifting இயந்திரங்கள் மற்றும் Lifting Tackles சென்னை தொழிலகப்ப பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநரால் அங்கீகரிக்கப்பட்ட தகுதி வாய்ந்த நபரால் (Competent Person) 12 மாதங்களுக்கு ஒருமுறை மழுமையாக பரிசோதிக்ப்பட்ட சான்றிதழ் பெறப்பட்டு இவ்விபரம் அதன் பதிவேட்டில் குறிப்பிட்டப்பட வேண்டும். ஆனால் முரணாக எதிரி தொழிற்சாலையில் 20.04.2025 அன்று Loading and unloading பணியில் பயன்படுத்தப்பட்ட மொபைல் கிரேன் மற்றும் பளு தூக்கும் பெல்ட் மேற்கண்ட சோதனைக்கு உட்படுத்தப்பட்டு சான்று பெறப்படாதது ஆய்வின் போது கண்டறியப்பட்டது. இது பிரிவு 29(1)(a)(iii) மற்றும் பிரிவு 29(2) மற்றும் விதி 55A(1) படி கடும் முரணாகும்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u> இல்லை.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2025.11.13 17:39:39 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.